தமிழ்

INDIAN HERITAGE CENTRE
இந்திய மரபுடைமை நிலையம்



# சோழமண்டலக் கரை முதல் மலாக்கா நீரிணை வரை

நம் தமிழ் மரபு குறித்த மறுபார்வை

23 நவம்பர் 2019–
30 ஜூன் 2020


சிறப்புக் கண்காட்சிக்கூடம்,
இரண்டாம் மாடி

# அறிமுகம்

தமிழர்கள் சிங்கப்பூரில் இடையறாது வாழும் 200வது ஆண்டு இது. ஆயினும், சிங்கப்பூர்க் கல் குறித்த அண்மைக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், சிங்கப்பூருக்கும் தமிழருக்கும் இடையில் கி.பி. 11–13ஆம் நூற்றாண்டுகளிலேயே தொடர்புகள் இருந்ததாகத் தெரிய வருகிறது. "சோழமண்டலக் கரை முதல் மலாக்கா நீரிணை வரை: நம் தமிழ் மரபு குறித்த மறுபார்வை" கண்காட்சி, பண்டைக்காலத்திலிருந்து நிகழ்காலம் வரை தென்கிழக்காசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அனுபவங்களைத் தொகுத்தளிக்கிறது.

தெற்காசிய மொழிகளில், தமிழ்மொழி ஒன்றுதான் இன்றுவரை தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்களிடையே தாய்மொழியாகத் தழைத்து நிற்கும் மிகத் தொன்மையான மொழி எனலாம். சிங்கப்பூரின் தமிழ்ச் சமூகத்தினர் உள்ளூர் கலாசாரங்களை அரவணைத்து அவற்றோடு ஒன்றிணைந்து வாழ்ந்து வந்திருப்பதால், உலகத் தமிழர்களில் தனித்துவமிக்க அடையாளத்தைக் கொண்டுள்ளனர். அடிப்படையில் காலனித்துவத்தால் உருவான தமிழ்ச் சமூகம், இன்று சிங்கப்பூரின் பல இன சமுதாயத்தில் துடிப்புமிக்க அங்கமாகத் திகழ்கின்றது.

இந்தக் கண்காட்சி இரு பகுதிகளாகப் படைக்கப்பட்டுள்ளது. முதல் பாகம், பண்டைக்காலத் தென்கிழக்காசியாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நீள்பயணத்தைப் படைக்கிறது. இரண்டாம் பாகம், பலரும் அறியாத 19ஆம் நூற்றாண்டு முன்னோடிகளையும் சிங்கப்பூரில் வாழ்ந்துவந்த பழம்பெரும் தமிழ்க் குடும்பங்கள் சிலவற்றையும் முன்வைக்கிறது. அனைத்துலக அரும்பொருளகங்கள் இரவலாகக் கொடுத்தவற்றோடு, முதல்முறையாக, கலைப்பொருட்களின் முப்பரிமாண ஒளிப்படங்களைக் காட்டும் மின்னிலக்கக் காட்சிகளும் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.





விளக்கப்படம்

# தமிழர்களின் நீள்பயணம்

“தமிழர்களின் நீள்பயணம்” என்ற தலைப்பிலான சிறப்பு விளக்கப்படம், தமிழர் வட்டாரங்களுக்கும் தென்கிழக்காசிய ஆட்சிகளுக்கும் சிங்கப்பூராவுக்கும் இடையில் நவீன காலத்திற்கு முன்பாக நிலவிய தொடர்புகளை ஆராய்கிறது. தமிழாின் தொடர்புகள் பற்றி தொல்பொருள் தளங்கள், அரும்பொருளகங்கள், மற்ற அமைப்புகள் ஆகியவற்றில் கண்டறியப்பட்ட அரிய ஆதாரங்களுடன், இவ்வட்டாரத்தின் சமகால தமிழர் மரபின் செழிப்பான வரலாற்றை இந்த விளக்கப்படம் படைக்கிறது. சிங்கப்பூரின் சமகால தமிழர்கள் வரலாற்று முக்கியத்துவமிக்கத் தளங்களுக்கு வருகையளிப்பதைக் காட்டி, நமது மரபு, நாம் மறுபடியும் கண்டறிவதற்காக நம்மைச் சுற்றிலும் காத்திருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறது.

பாகம் 1

# பண்டைக்காலத் தென்கிழக்காசியாவில் தமிழர்கள்

பண்டைக்காலத் தென்கிழக்காசியாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகளைக் காட்டும் பாகம் 1, இவ்வட்டாரத்துடன் தமிழர்களுக்கிருக்கும் இடைவிடாத நீண்டகாலத் தொடர்புகளை நமக்கு நினைவூட்டுகிறது. தொல்பொருள் ஆய்வு, கல்வெட்டு, நிலப்படவியல், கலை மற்றும் இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் இப்பகுதி படைக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டாரத்தின் காலனித்துவ கடந்தகாலத்தின் விளைவாக உலகெங்கிலும் பரவிக்கிடக்கும் திரட்டுகளைக் கொண்டு ஒரு கண்காட்சியைத் தொகுத்தளிப்பதற்கு 21ஆம் நூற்றாண்டு அரும்பொருளகம் எதிர்நோக்கும் சவால்களையும் இக்கண்காட்சி எடுத்துரைக்கிறது.



சிங்கப்பூர் கற்பாகங்களின் முப்பரிமாண வடிவங்கள்
கி.பி. 11–13ஆம் நூற்றாண்டு
இந்திய மரபுடைமை நிலையத்தால் மின்னியல் முறையில் மறுஉருவாக்கப்பட்டது



பேரரசர் ராஜராஜ சோழன் வெளியிட்ட சாசனம் பொறிக்கப்பட்ட செப்புத்தகடு
கி.பி. 1006
லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் திரட்டு
இந்திய மரபுடைமை நிலையத்தால் மின்னியல் முறையில் மறுஉருவாக்கப்பட்டது



தமிழில் பொறிக்கப்பட்ட கப்பல் மணி, ஆங்கில மொழியாக்கம்: மொஹிதீன் பக்ஷ் கப்பல் மணி
17–18ஆம் நூற்றாண்டு
தமிழ் நாட்டில் செய்யப்பட்டு, நியூசிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டது
நியூசிலாந்து அரும்பொருளகம்
டி பாபா டொங்கரிவாவின் திரட்டு, வில்லியம் கொலென்சோவின் கொடைப்பொருள், 1899

சிவ நடராஜா
கி.பி. 12 ஆம் நூற்றாண்டு
சோழர் ஆட்சிக்காலம்
தமிழ்நாடு
இந்திய தேசிய அரும்பொருளகம்
இரவலாகக் கொடுத்தது, புது டில்லி






சவுத் பிரிட்ஜ் சாலையில் அமைந்திருந்த மஸ்ஜித் ஜமா சூலியா, ஸ்ரீ மாரியம்மன் கோயில்
1860, சிங்கப்பூர்
பீட்டர் பெர்ன்ஹார்ட் வில்ஹம் ஹெய்ன் வரைந்தது
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் இரவலாகக் கொடுத்தது

பாகம் 2

# 19ஆம் நூற்றாண்டு சிங்கப்பூரில் தமிழர்கள்

1819ஆம் ஆண்டில் சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் சிங்கப்பூரை பிரிட்டிஷ் வணிகத் துறைமுகமாக நிறுவியதிலிருந்து தமிழர்கள் சிங்கப்பூரில் குடியேறினர். கண்காட்சியின் இரண்டாம் பாகம், சிங்கப்பூரிலிருந்த பல்வேறு தமிழ்ச் சமூகங்களின் வாழ்க்கைப் பின்னணிகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. தமிழர் என்ற இனப்பெயர் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்துதான் மலாக்கா நீரிணையில் பயன்படுத்தப்பட்டது. இவ்வட்டாரத்தின் தமிழர்கள் கிலிங் மற்றும் சூலியா என்ற காரணப்பெயர்களால் நீண்டகாலமாகக் குறிப்பிடப்பட்டு வந்தனர். சூலியா என்ற பெயர், சோழமண்டலத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் வணிகர்களைக் குறித்தது. சிங்கப்பூர் சூழலில் கிலிங் என்ற சொல்லைப் பயன்படுத்திய ஆகப் பழமையான இலக்கியப் படைப்பாகக் "செஜாரா மலாயு" கருதப்படுகிறது. மலாய் தீவுக்கூட்டத்துடன் நீண்டகாலமாக வணிக, அரசியல், திருமணத் தொடர்புகளை அமைத்திருந்த புகழ்பெற்ற அரசாட்சியை இப்பெயர் குறிப்பிட்டது. கிலிங் என்பது கலிங்கத்தை மட்டுமல்லாது தென்கிழக்கு சோழமண்டலக் கரையையும் குறித்தது. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதிக்குள், கிலிங் என்ற சொல் இகழ்ச்சியான அர்த்தத்துடன் கருதப்பட்டது. மலாக்கா நீரிணை குடியேற்றங்களின் ஆரம்பகாலப் பதிவேடுகளில், தமிழர்கள் "சோழமண்டலக் கரையின் பூர்வீக மக்கள்" என்று குறிப்பிடப்பட்டனர்.


...rous and liberal disposition is confident that yo...
...excuse them for the freedom they have tak...
making this application –
...1822

நாராயண பிள்ளை சமர்ப்பித்த மனு
அக்டோபர் 1822, சிங்கப்பூர்
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது



தமிழ் செங்கல் தயாரிப்பாளரின் வார்ப்பச்சு
19ஆம் நூற்றாண்டு, சிங்கப்பூர்
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் இரவலாகக் கொடுத்தது

# கலைஞரின் காட்சிப்படைப்புகள்




கையில் இதயம்—அடையாளங்களின் சங்கமம்
அனுரேந்திரா ஜெகதேவா
இந்திய மரபுடைமை நிலையத்தின் ஏற்பாடு
மற்றும் அனுரேந்திரா ஜெகதேவாவின் ஆதரவுடன்

பெண் தமிழ்க் குடியேறியின் கதை பல சமயங்களில் பெயர் விவரங்களின்றி மறைந்து கிடக்கிறது. சிங்கப்பூருக்கும் மலாயாவுக்கும் வந்த ஆரம்பகாலத் தமிழ்க் குடியேறிகளின் வாழ்க்கை பற்றி அறியப்படுபவை கொஞ்சமே. பெரும்பாலான விவரங்கள் ஆண்களைப் பற்றியவையாகவே உள்ளன. கடந்தகால விவரங்களில் நிலவும் இந்தப் பாலினச் சமத்துவமின்மையினால், சமகாலப் புலம்பெயரும் தமிழ்ப் பெண்ணின் பயணத்தை ஆராய்கிறார் அனுரேந்திரா ஜெகதேவா. தாலியைப் பயன்படுத்தி, பெண் குடியேறியின் கலாசார, இடச் சிந்தனைகளை அவர் ஆராய்கிறார்.



மசாலா
குமாரி நாகப்பன்
இந்திய மரபுடைமை நிலையத்தின் ஏற்பாடு

சிங்கப்பூர் கலைஞர் குமாரி பல ஆண்டுகளாகச் சுவைப்பொருட்களுடன் ஈடுபட்டு வருகிறார். மசாலா படைப்பில், சுவைப்பொருள் தோட்டத்தை உருவாக்கி, தமிழ்க் கரைக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையிலான சுவைப்பொருள் வணிகக் கட்டமைப்புகளின் வரலாற்று முக்கியத்துவத்தையும், தமிழ் உணவில் சுவைப்பொருட்களின் சிறப்பம்சத்தையும் அவர் போற்றிக் கொண்டாடுகிறார். இந்தியச் சமூகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் மசாலா என்ற சொல், ஏலக்காய், மல்லி, ஜாதிப்பத்ரி, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, சோம்பு, சீரகம் போன்ற சுவைப்பொருட்களின் கலவையைக் குறிக்கிறது.




பயணியின் கதைகள்
லாவண்யா மணி வரைந்தது
இந்திய மரபுடைமை நிலையத்தின் ஏற்பாடு


பயணியின் கதைகள் படைப்பில், பெரிதும் நாடப்பட்ட இந்திய வணிகத் துணிகளின் மாய ஈர்ப்புக்குப் புதுவடிவம் கொடுத்து, சோழமண்டலக் கரையின் வணிகப் பொருட்களிலும் துறைமுகங்களிலும் காலனித்துவ ஆட்சியினர் காட்டிய ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தனது சொந்தக் கண்ணோட்டத்தில் படைக்கிறார் லாவண்யா மணி. கிழக்கத்திய வட்டாரங்களுக்குப் பயணித்த ஆரம்பகாலப் பயணிகள், புதிய, அறியப்படாத தேசங்களைப் பற்றிய தகவலைப் பரப்புவதிலும், கிழக்கின் அற்புதங்களையும் அதிசயங்களையும் எடுத்துரைப்பதிலும் அதிக செல்வாக்குடன் விளங்கியதையும் அவர் வெளிக்காட்டுகிறார்.

# நிகழ்ச்சிகள்

மாநாடு

குறுந்தங்கலர்கள் முதல் குடியேறிகள் வரை—
தென்கிழக்காசியாவிலும் சிங்கப்பூரிலும் தமிழர்கள்
அனைத்துலக மாநாடு

indianheritagecentre.peatix.com
இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்




6 டிசம்பர் 2019 | மாலை 6 முதல் இரவு 8.30 வரை
விரிவுரை அறை, இரண்டாம் மாடி, இந்திய மரபுடைமை நிலையம்

7 டிசம்பர் 2019 | காலை 9.30 முதல் இரவு 7.30 வரை
ரிவர் அறை, ஆசிய நாகரிக அரும்பொருளகம்
1 எம்ப்ரஸ் பிளேஸ், சிங்கப்பூர் 179555

குறுந்தங்கலர்கள் முதல் குடியேறிகள் வரை தமிழ் மாநாடு
ஏப்ரல் 2020 | காலை 10 முதல் மாலை 5 வரை
விரிவுரை அறை, இரண்டாம் மாடி, இந்திய மரபுடைமை நிலையம்

சிங்கப்பூருக்கும் தென்னிந்தியாவுக்கும் 1819ஆம் ஆண்டுக்கு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தொடர்புகள் இருந்தன. சிங்கப்பூரின் இருநூற்றாண்டு நிறைவு ஆண்டில் நடத்தப்படும் இம்மாநாடு, 200 ஆண்டுகளுக்கு முந்திய காலகட்டத்தில் தமிழர்களுக்கும் தென்கிழக்காசிய சமூகங்களுக்கும் இடையிலிருந்த இருவழித்தொடர்புகளை ஆராய்கிறது. மாநாட்டின் முக்கிய பேச்சாளர்கள், பண்டைக்கலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள், சிங்கப்பூராவுடன் அவர்களுக்கிருந்த தொடர்புகள் ஆகியன பற்றிய கண்ணோட்டங்களை, சிங்கப்பூர் கல் உள்ளிட்ட பற்பல ஆதாரங்களை மறுஆய்வு செய்து பகிர்ந்து கொள்வார்கள். 19ஆம் நூற்றாண்டு தமிழர்களையும், காலனித்துவ சமுதாயத்தில் அவர்கள் ஆற்றிய பங்கையும் பற்றி அறியப்படுபவை கொஞ்சமே. மாநாட்டின் நிறைவுக் கலந்துரையாடலில், 200 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து நீடித்துவரும் ஒரு சமூகத்தைப் பற்றிய சமகாலக் கண்ணோட்டங்களை வெளியிடும்.

கைவினை விளக்கக்காட்சிகள்
கலா சங்கம்

பட்டறைகளுக்கு indianheritagecentre.peatix.com
இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்

இந்திய மரபுடைமை நிலையமும் இந்தியத் தூதரகமும் இணைந்து படைக்கும் கலா சங்கம் நிகழ்ச்சிக்கு வருகை தாருங்கள். இந்தச் சிறப்புக் கண்காட்சியை முன்னிட்டு, சோழமண்டல வட்டாரத்தின் கைவினைக் கலைகள் இந்திய மரபுடைமை நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. சிங்கப்பூர் இந்தியச் சமூகத்தின் கண்கூடற்ற கலாசார மரபின் இந்த முக்கிய அம்சத்துடன் இந்த வளமான மரபை அடுத்தடுத்த தலைமுறைகளுடன் பகிர்ந்து கொள்வது கலா சங்கம் நிகழ்ச்சியின் நோக்கம்.



## என் குடும்பத்தின் கதை
## விரிவுரைத் தொடர்

மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை
ஜனவரி—மே 2020 | மாலை 6 மணி முதல் இரவு 7.30 மணி முதல் வரை
காட்சிக்கூட வருகையளிப்புடன் நிகழ்ச்சி நிறைவுறும்

indianheritagecentre.peatix.com
இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்

**எங்களின் 150 ஆண்டுகளின் பங்களிப்பு**
அண்ணாமலை பிள்ளையின் வரலாற்றையும் வம்சாவளியையும் அவரது சந்ததியினரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

**பால் மன்னன்**
கூனா வேலு பிள்ளையின் வரலாற்றையும் வம்சாவளியையும் அவரது சந்ததியினரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

**தலைமுறைகளுக்கு கணக்கு**
சமூக வரலாற்றாளரும் நான்காம் தலைமுறை செட்டியாருமான லக்ஷ்மணன் சுப்பையா, தனது குடும்பத்தினரின் குறும்பயணம், மார்க்கெட் ஸ்திரீட்டில் குடியேறிய வாழ்க்கை பற்றி பேசுகிறார்.

**எனது உணவு பாரம்பரியம்**
இளையதம்பி, மீனாட்சி ஆகியோரின் வரலாற்றையும் வம்சாவளியையும் அவரது சந்ததியினரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

**அவர் குதிரை வண்டிகளுடன் தொழில் நடத்தினார்**
சங்கு தேவரின் வரலாற்றையும் வம்சாவளியையும் அவரது சந்ததியினரிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

## நிபுணர்களோடு காட்சிக்கூட வருகைகள்

கண்காட்சி பொறுப்பாளர் நளினா கோபாலும் கலை வரலாற்றாளர் சுரேஷ்குமார் முத்துகுமரனும் நடத்தும் சிறப்பு கண்காட்சி சுற்றுலாவில், தென்கிழக்காசியாவிலும் சிங்கப்பூரிலும் வாழ்ந்த தமிழர்களின் வரலாற்றைப் பற்றிய ஆழமான ஆய்வின் விவரங்களைக் கேட்டறிந்திடுங்கள்.

கண்காட்சி பொறுப்பாளருடன் சுற்றுலா:
10 ஜனவரி 2020, 10 ஏப்ரல் 2020

கலை வரலாற்றாளர் சுரேஷ்குமார் முத்துகுமரனுடன் பார்வையிடுங்கள்: 11 ஏப்ரல் 2020



1850களில் சிங்கப்பூரை வந்தடைந்த சங்கு தேவர், வாடகை குதிரை வண்டி ஓட்டுவதாக அடையாளம் காட்டியவர் புஷ்பா ராமானுஜன்
19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, சிங்கப்பூர்
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளம் வழங்கியது

ஏற்பாடு

இந்திய மரபுடைமை நிலையம்

ஆதரவு

Ministry of Culture, Community and Youth

மரபுடைமை நிலையம்

National Heritage Board

இதன் ஆதரவில்

SG Bicentennial
From Singapore to Singaporean

ஒருங்கிணைந்த திட்டப்பணி

22 Nov 2019 – 22 Mar 2020
SINGAPORE BIENNALE 2019

ஆதரவு

வளர்தமிழ் இயக்கம்
Tamil Language Council

Yuvabharathi International School

High Commission of India Singapore

அனுரேந்திரா ஜெகதேவா

வழிகாட்டிச் சுற்றுலா ஆதரவு

Friends of the Museums Singapore

Museum Volunteers

Mandarin Guides

இரவல் கொடுத்த அமைப்புகள்:

ஆசிய நாகரிக அரும்பொருளகம்
மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தின் உலகளாவியத் தொல்பொருள் ஆய்வு நிலையம்
லெய்டன் பல்கலைக்கழக நூலகம்
நியூசிலாந்து அரும்பொருளகம் டெ பாபா டொங்கரிவா
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம்
சிங்கப்பூர் தேசிய நூலகம்
இந்தோனேசிய தேசிய அரும்பொருளகம்
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்
இந்திய தேசிய அரும்பொருளகம், புது டில்லி
சிங்கப்பூர் கடல்துறை துறைமுக ஆணையம்
சைகோன் செட்டியார் கோயில் அறநிதி பிரைவெட் லிமிடெட்
ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலின் நூலகம்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகம்
சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்
சிங்கப்பூர் பொய்கைநல்லூர் நற்பணி மன்றம்
தமிழ் நாடு மாநில ஆவணக் காப்பகம்

இரவல் கொடுத்தோர் மற்றும் நன்கொடையாளர்கள்:

ஆ. ஆதிநாராயணன், மேனகா மற்றும் குடும்பத்தினர்
ஆ. வீரமணி
அப்துல் கரீம் ஒலி முகம்மது
ஆனந்த மாணிக்கம்
சித்ரா ராதாகிருஷ்ணன்
எல்ஃபி எலிசா கமாருதீன்
பா. கோவிந்தசாமி செட்டியார் மற்றும் சு.லெ. பெருமாள் குடும்பத்தினர்
ஞானப்பிரகாஸம் பிள்ளை குடும்பத்தினர்
ரம.வெ.லெ.நா. சுப்பையா செட்டியார் குடும்பத்தினர்
சங்கு தேவர் குடும்பத்தினர்
இந்திரா ஈஸ்வரன் முத்து மற்றும் லாவன் ஈஸ்வரன்
ஜெ. ராஜா முகம்மது
ஜனமித்ரா தேவன்
கன்னன் பாலா மற்றும் சரோஜினி பக்கிரிசாமி
மலையரசி ஸ்ரீநிவாசன் மற்றும் வி கலைச்செல்வன்
மோகன் ஜெயராம்
டத்தோ பால் சுப்ரமணியம்
பொ.கோ.பி.ராமகிருஷ்ணன் மற்றும் ஷாந்தா ராமகிருஷ்ணன்
ரெ. கங்காதரன் தேவர்
ராஜம் சாரங்கபாணி
ரெங்கசாமி ஸ்ரீதரன்
பி. சிவராமன்
சுரேஷ்குமார் முத்துக்குமரன்
சுஷீலா சுந்திரம் கிராஃப்ட்
வசந்த குமாரி மகாதேவன்
விமலா ராஜமானிக்கம்
ஸைபுன் ஸிராஜ்

பின்வரும் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு நன்றி:

சுரேஷ்குமார் முத்துக்குமரன்
க. ராஜன்
இயன் சின்கிளேர்
அருன் மகிழ்நன்
அ. பாண்டியன்
ஆ. வீரமணி

வாய்மொழி வரலாறு பங்களிப்பாளர்கள்:

பீர் அக்பர்
ரெஹனா அலி
ஹரிணி வி.
முனிரா ஷா ஜஹன்
சரத்குமார்
அருன் மகிழ்நன்
ஜான் மிக்ஸிக்
சுரேஷ்குமார் முத்துக்குமரன்
இந்திரா ஈஸ்வரன் முத்து
ந. நெடுமாறன்
சித்ரா ராதாகிருஷ்ணன்
அனபரசு ராஜேந்திரன்
முக்தார் சைடின்
த. ராஜசேகர்
பி. சிவராமன்
லக்ஷ்மணன் சுப்பையா
டத்தோ பால் சுப்ரமணியம்
ஆ. வீரமணி

இந்திய மரபுடைமை நிலையத்தின் விவரம்

தேசிய மரபுடைமைக் கழக நிர்வாகத்தின்கீழ், இந்தியச் சமூகத்தின் ஆதரவுடன் செயல்படும் இந்திய மரபுடைமை நிலையம், தென்கிழக்காசிய வட்டாரத்தில் இந்திய, தெற்காசிய சமூகங்களின் வரலாற்றை ஆய்ந்தறிகிறது. நிலையத்தின் நான்கு மாடி கட்டடம், இந்தியப் பாரம்பரியத்தையும் நவீன கட்டடக்கலை அம்சங்களையும் ஒருங்கிணைக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த, நீடித்து நிலைக்கத்தக்க கட்டடமாகத் திகழ்கிறது. கட்டடத்தின் வெளித்தோற்றம் “பவோலி” (இந்தியப் படிக்கிணறு) போல வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தியக் கலாசாரத்தைப் போற்றிக் கொண்டாடுவதற்கும் பேணிக் காப்பதற்கும் நகரமய அரங்கை உருவாக்கித்தர நிலையம் முற்படுகிறது. இங்கு ஐந்து நிரந்தரக் காட்சிக்கூடங்களும், சிறிய அளவிலான அரும்பொருளக வசதிகளும், அரும்பொருளகக் கடையும், நிகழ்ச்சி மற்றும் நடவடிக்கை இடங்களும் உள்ளன.

எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

+65 62911601
www.indianheritage.org.sg
facebook.com/indianheritagecentre
@indianheritage_sg

ஸ்மார்ட்டிஃபை வழி சுயவழிகாட்டுப் பயணங்கள்

ஆப் ஸ்டோர் மற்றும் கூகல் ப்ளே ஸ்டோர்-லிருந்து செயலியை பதிவிறக்கம் இலவசமாகப் செய்யவும்.

SMARTIFY

தெமாசெக் முதல் சிங்கப்பூர் வரை

மரபுடைமை நிலையங்கள் படைக்கும் இந்தச் சிறப்புக் கண்காட்சிகளில் சிங்கப்பூரின் இருநூற்றாண்டு நிறைவைத் தொடர்ந்து ஆராய்ந்திடுங்கள்!

மலாய் மரபுடைமை நிலையம்

சீகோர் சிங்கா, சியோராங் புத்ரா டன் செபிங்காய் செர்மின்: சிங்கப்பூராவின் பிரதிபலிப்பும் திரிபும்
12 அக்டோபர் 2019–21 ஜூன் 2020
www.malayheritage.org.sg

சன் யாட் சென் நன்யாங் நினைவு மண்டபம்

தூரிகை முதல் கண்ணாடிவில்லை வரை: சிங்கப்பூரின் ஆரம்பகால சீனப் புகைப்படக் கூடங்கள்
2 நவம்பர் 2019–3 மே 2020
www.sysnmh.org.sg

எல்லா தகவல்களும் அச்சிடப்படும் நேரத்தில் சரியானவையாகும். இந்திய மரபுடைமை நிலையத்திற்கு, தனது நிகழ்ச்சிகளில் முன்னறிவிப்பின்றி மாற்றங்களும், திருத்தங்களும் செய்யும் உரிமை உண்டு. உரை நிகழ்ச்சிகளிலும், பயிலரங்குகளிலும் பேச்சாளர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் அல்லது கலைஞர்கள் வெளியிடும் கண்ணோட்டங்களும், கருத்துக்களும் இந்திய மரபுடைமை நிலையத்தின் நிலைப்பாட்டைக் குறிக்கும் என்ற அவசியமில்லை. எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்தப் பதிப்பின் உள்ளடக்கம், பதிப்பாளரான அரும்பொருளகத்தின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வெளியிடப்படக் கூடாது.
© பதிப்புரிமை 2019.

## வருகையாளர் தகவல்

முகவரி
5 கேம்பல் லேன், சிங்கப்பூர் 209924

திறந்திருக்கும் நேரம்*
செவ்வாய் முதல் வியாழன் வரை:
காலை 10 முதல் இரவு 7 வரை
வெள்ளியும் சனியும்: காலை 10 முதல் இரவு 8 வரை
ஞாயிறு, பொது விடுமுறை நாட்கள்:
காலை 10 முதல் மாலை 4 வரை
திங்கட் கிழமைகளில் மூடியிருக்கும்

*காட்சிக் கூடங்களுக்குக் கடைசி அனுமதி, நிலையம் மூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு

வழிகாட்டுதலுடான பயணங்கள்
“சோழமண்டலக் கரை முதல் மலாக்கா நீரிணை வரை —நம் தமிழ் மரபு குறித்த மறுபார்வை” என்ற கண்காட்சிக்கு வழிகாட்டுதலுடனான பயணங்களை எங்களது நிபுணத்துவ வழிகாட்டிகளுடன் ரசித்து மகிழ இணைந்திடுங்கள்.

ஆங்கில வழிகாட்டுதல் பயணங்கள்*
காலை 11, புதன், வெள்ளிசனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30, மாதத்தின் முதலும் மூன்றாவதும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும்

தமிழ் வழிகாட்டுதல் பயணங்கள்*
மாலை 4, மாதத்தின் முதல் சனிக்கிழமை

*ஜனவரி 2020 முதல்

